بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 11/06/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

கடந்த குத்பாக்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்ட போது ஹுதைபியா சமாதான உடன்படிக்கை குறித்து கூறப்பட்டது. குறைஷியர்களின் நட்புக்கோத்திரமான பனூ பக்ர் ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்கு எதிராக நடந்தவாறு முஸ்லிம்களின் நட்புக்கோத்திரமான பனூ குஸாஅஹ் கோத்திரத்தின் மீது தாக்குதல் தொடுத்தனர். அத்துடன் குறைஷியர்கள் பனூ பக்ருக்கு உதவியும் செய்தனர். அப்போது அபூ ஸுஃப்யான் அவர்கள் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காக மதீனாவுக்கு வந்தார்.

டாக்டர் அலீ பின் ஸலாபி எழுதுகிறார்கள்: அச்சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூ ஸுஃப்யானை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் வந்தார்கள். இந்த இருவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் செல்வதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வழியில் பார்த்துவிட்டார்கள். ஆகவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அங்கு சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில், அல்லாஹ்வுடைய பகைவனான அபூ ஸுஃப்யானுடைய தலையை துண்டிப்பதற்கு எனக்கு அனுமதி தாருங்கள் என்று கோரிக்கை வைத்தார். அதைக்கேட்ட ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அபூ ஸுஃப்யானுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) ஆகிய இருவருக்குமிடையில் உரையாடல் நடந்து கொண்டிருந்தது. அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அப்பாஸே! அபூஸுஃப்யானை (இப்போது) உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்; காலையில் அவரை அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள்.

ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு ஷஃஅபான் மாதத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை முப்பது நபர்களுடன் ஹவாஸுன் கோத்திரத்தின் ஒரு கிளையை நோக்கி துர்பா எனும் இடத்திற்கு போருக்கு அனுப்பி வைத்தார்கள்.

வாழ்க்கை வரலாற்று நூல்களில் முதல்முறையாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கொடியைப் பற்றிய குறிப்பு கைபர் போரில் காணப்படுகிறது. அதற்கு முன்பு சிறு கொடிகள்தான் இருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் உகாப் எனும்

பெயருடைய கருப்புக் கொடி ஒன்று இருந்தது. அது உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் போர்வையிலிருந்து தயாரிக்கப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கைபரில் தங்கியிருந்தபோது அன்னாருக்கு ஒற்றைத்தலைவலி உண்டாயிற்று. அதன் காரணமாக அன்னார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் வெளியே செல்ல இயலவில்லை. இவ்வாறான நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது கொடியை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள். பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கைகளில் அல்லாஹ் வெற்றியை வழங்கியிருந்தான்.

கைபரின் வெற்றிக்கு பிறகு கிடைத்த போர் செல்வத்தில் ஐந்தில் ஒரு பங்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குரியதாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதை முஸ்லிம்களிடத்தில் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள்.

யூதர்களில் எவர்களெல்லாம் நாடு கடத்தப்படுவதற்கு ஒப்புக்கொண்டு கோட்டைகளை விட்டு இறங்கி வந்தார்களோ அவர்களுக்கு ஒரு நிபந்தனையின் அடிப்படையில் அவர்களுடைய சொத்துக்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருப்பிக் கொடுத்தார்கள். அந்த சொத்துக்களிலிருந்து கிடைக்கக்கூடிய பழங்கள், அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பங்கிட்டு கொடுக்கப்பட வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய காலகட்டத்திலும் இதே நடைமுறைதான் தொடர்ந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத்தில் அன்னாருக்கு ஒரு விஷயம் தெரிய வந்தது. அது என்னவென்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடைசி நோயின் போது, அரபு தீபகற்பத்தில் இரு மார்க்கங்கள் ஒன்றாக இருக்காது என்று கூறியிருந்தார்கள். இதைப்பற்றி அறிந்து கொண்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், எந்த யூதர்களிடத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் எந்த ஒரு ஒப்பந்தமும் இல்லையோ அவர்கள் அனைவரையும் நாடு கடத்தினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தாம் இஃதிகாஃப் இருக்க வேண்டும் என அறியாமைக் காலத்தில் நேர்ந்திருந்தார்கள். ஹுனைனில் இருந்து திரும்பி வரும்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் அதைக் குறித்து கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதை நிறைவேற்றும்படி அனுமதி வழங்கினார்கள்.

தபூக் போரின்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சந்தா கொடுக்கும்படி கூறிய போது, இன்று நான் அபூபக்ரை முந்திச் செல்ல இயலும் என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எண்ணிக் கொண்டார்கள். ஆகவே அன்னார் தன்னுடைய பாதி செல்வத்தைக் கொண்டு வந்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அந்தக் காலம் இஸ்லாத்திற்கு மிகவும் துன்பமான காலகட்டமாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தன்னுடைய அனைத்து செல்வத்தையும் கொண்டு வந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னால் சமர்ப்பித்து விட்டார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்த பிறகு கூறுகிறார்கள்:** “சிலர் பைஅத் செய்துவிடுகின்றனர்; உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என உறுதிமொழியும் கூறி விடுகின்றனர். ஆனால் உதவி

ஒத்தாசையின் போது தமது பைகளை அழுத்திப் பிடித்துக் கொள்கின்றனர். இவ்வாறான உலக நேசத்தால் ஏதேனும் மார்க்க பயனை அடைய முடியுமா என்ன?''

ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது நோய் கடுமையாக பாதித்த போது, என்னிடம் எழுதுவதற்கான பொருட்களை கொண்டு வாருங்கள்; நான் எவ்வாறான விஷயத்தை எழுதிவிடுகிறேன் என்றால், அதன் பிறகு நீங்கள் வழிதவறி போய்விட மாட்டீர்கள் என்று அன்னார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.

ஹஸ்ரத் சய்யிது ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறந்து விடுவார்கள் என்ற சிந்தனை கூட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இருக்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களைப் பார்த்து, நம்மிடத்தில் அல்லாஹ்வுடைய வேதம் உள்ளது. அது நமக்குப் போதுமானது. ஆகவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கஷ்டம் கொடுக்க வேண்டாம் என்று கூறினார்கள். இதைக்கேட்ட அங்கிருந்த மக்களுக்கிடையே கருத்து வேறுபாடு தோன்றியது. எந்த அளவு கூச்சல் அதிகரித்து விட்டது என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (அம்மக்களைப் பார்த்து), என்னிடத்திலிருந்து எழுந்து செல்லுங்கள் என்று கூறினார்கள்.

அந்த நிம்மதியற்ற நிலையிலும் கூட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ்வுடைய வேதத்தின் மீது எந்த அளவுக்கு கண்ணியம் இருந்தது என்றால், ஹஸ்ரத் உமருடைய பேச்சைக் கேட்ட பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், எழுதுகோல், தாள் மற்றும் மையை கொண்டு வரச்சொல்லும்படியான எண்ணம் கொள்ளவில்லை என்பதை இதிலிருந்து அறிய முடிகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த சம்பவத்திற்கு பிறகும் கூட சில நாட்கள் வரை உயிருடன் இருந்தார்கள். இந்த சம்பவம் நடந்த நாளில் வேறு சில அறிவுரைகளையும் கூறியிருந்தார்கள். ஆனால் (எழுத வைக்க விரும்பிய) அந்த எண்ணத்தை தொடரவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மரணம் நிகழ்ந்த போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து நின்று, அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணிக்கவில்லை! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணித்து விட்டார்கள் என்று யாராவது கூறுவார் என்றால் நான் எனது இந்த வாளினால் அவரை கொன்று விடுவேன். சில மக்களுடைய கை கால்களை வெட்டும் பொருட்டு அல்லாஹ் நிச்சயமாக அன்னாரை எழுப்புவான் என்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணித்த போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மதீனாவில் இருந்து இரு மைல்கள் தொலைவில் உள்ள ஸுனஃ என்ற இடத்தில் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு உரையாற்றிக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு வந்தடைந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய அருளுக்குரிய முகத்தில் இருந்து துணியை விலக்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முத்தமிட்டார்கள். பிறகு வெளியே வந்து மக்களைப் பார்த்து சொற்பொழிவாற்றினார்கள்.

இறைவனை புகழ்ந்து துதி பாடிய பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பாருங்கள்! எவர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வணங்கி வந்தாரோ அவர் கேட்டுக் கொள்ளட்டும்! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோ நிச்சயமாக இறந்து விட்டார்கள். எவர் அல்லாஹ்வை

வணங்கி வந்தாரோ அவர் நினைவில் கொள்ளட்டும்! அல்லாஹ் உயிருள்ளவன் ஆவான். ஒருபோதும் மரணிப்பவன் அல்லன். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்,

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ اَفَا۟ئِنْ مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰۤى اَعْقَابِكُمْ ؕ وَمَنْ يَّنْقَلِبْ عَلٰى عَقِبَيْهِ فَلَنْ يَّضُرَّ اللّٰهَ شَيْـًٔا ؕ وَسَيَجْزِى اللّٰهُ الشّٰكِرِيْنَ

''முஹம்மது ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன் தோன்றிய எல்லாத் தூதர்களும் மரணமடைந்து விட்டனர். எனவே அவர் மரணமடைந்து விட்டாலோ, கொலை செய்யப்பட்டாலோ, நீங்கள் உங்கள் குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவீர்களோ? தமது குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவோரால் ஒருபோதும் அல்லாஹ்வுக்குச் சிறு இழப்பையும் ஏற்படுத்த முடியாது. அல்லாஹ் நன்றி செலுத்துவோருக்கு நிச்சயமாக நற்பலன் வழங்குவான்.'' (திருக்குர்ஆன் 3: 145)

என்ற வசனத்தை ஓதினார்கள். இந்த வசனத்தைக் கேட்டு மக்கள் தேம்பித் தேம்பி அழுதார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வசனத்தை ஓதக் கேட்டபோது நான் எந்த அளவுக்கு அஞ்சி விட்டேன் என்றால், அதிர்ச்சியின் காரணமாக எனது கால்களால் என்னைத் தாங்க இயலவில்லை. நான் பூமியில் விழுந்து விட்டேன் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அறிவிப்பாளர் கூறுகிறார். இந்த வசனத்தையும் இறைவன்தான் இறக்கி உள்ளானா? என்று மக்கள் அறியாமல் இருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களோ, இறைவன் மீது ஆணையாக! நான் இந்த வசனத்தை ஹஸ்ரத் அபூபக்ரிடமிருந்தே கேட்டேன் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''எல்லா நபியும் இறந்து விட்டனர் என்ற இந்த சான்றை திருக்குர்ஆனிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் எடுத்து வைத்திருக்கவில்லை என்றால், அத்துடன் இச்சான்று தெளிவானதும், உறுதியானதுமாக இல்லாதிருந்தால், ஒரு இலட்சத்தை விடவும் அதிகமாக இருந்த சஹாபாக்கள் வெறும் யூகத்தையும், சந்தேகத்திற்குரிய விஷயத்தையும் எவ்வாறு ஒப்புக்கொண்டனர்? உங்களுடைய இந்த சான்று முழுமையற்றது. رَافِعُكَ اِلَيَّ என்ற வசனம் திருக்குர்ஆனுடைய வசனம் தான் என்று இதுவரை உங்களுக்கு தெரியாதா என்ன? அதில் ஹஸ்ரத் ஈஸா (அலை) பூத உடலுடன் வானத்திற்கு சென்றது கூறப்பட்டுள்ளதே! بَلْ رَّفَعَهُ اللّٰهُ اِلَيْهِ என்ற வசனத்தையும் நீங்கள் கேட்டதில்லையா? அவ்வாறு இருக்கும் போது ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வானத்திற்கு சென்றிருப்பது ஏன் சாத்தியமற்றது என்று சஹாபாக்கள் ஏன் வாதம் செய்யவில்லை? ஸஹாபாக்களுக்கு திருக்குர்ஆனைக் குறித்து எந்த அளவுக்கு ஆழிய ஞானம் இருந்தது என்றால், இந்த வசனத்தை கேட்டவுடன் அதில் خَلَتْ - சென்று விட்டார்கள் என்பதன் விளக்கத்தை

اَفَا۟ئِنْ مَّاتَ اَوْ قُتِلَ - அவர் இறந்து போனாலோ அல்லது கொல்லப்பட்டாலோ என்ற சொற்றொடரில் கண்டபிறகு ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மரணத்தின் காரணமாக உடனடியாக கடும் துன்பத்தில் மூழ்கி விட்டனர். அவர்களது உள்ளங்கள் நொறுங்கிப் போய் விட்டன. முந்தைய நபிமார்கள் அனைவரும் இறந்து விட்டனர் என்று அவர்கள் புரிந்து கொண்டனர்.''

**இன்னொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:** ''இறைவன் ஆயிரக்கணக்கான நற்பலனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வழங்குவானாக! அவர்கள் வெகுவிரைவில் இந்த குழப்பத்தை

வீழ்த்தினார்கள். அவர்கள் தெளிவான ஆதாரங்களை எடுத்து வைத்து, கடந்தகால நபிமார்கள் அனைவரும் இறந்துவிட்டனர் என கூறினார்கள்.

இந்த இடத்தில் خَلَتْ என்ற சொல்லுக்கு சில நபிமார்கள் உயிருடன் வானத்திற்கு சென்று உள்ளார்கள் என்ற பொருள் கொடுக்கப்பட்டால், அப்போது அந்நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உண்மையின் பக்கம் இருந்திருப்பார்கள். இந்த வசனம் அவருக்கு ஆதரவு தந்திருக்கும். ஆனால் خَلَتْ - சென்று விட்டார்கள் என்பதற்கு இருவகைப் பொருள் மட்டுமே கொள்ள முடியும். அதாவது, இயல்பான மரணத்தினால் இறப்பது அல்லது கொல்லப்படுவது.''

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் பனீ ஸாயிதாவின் வீட்டில் ஹஸ்ரத் சஅது பின் உபாதா (ரலி) அவர்களுக்கருகில் அன்ஸார் ஒன்று கூடினார்கள். உங்களிலிருந்து ஒரு அமீரும் எங்களில் இருந்து ஒரு அமீரும் இருக்கவேண்டும் என்று கூறினர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஆகியோர் அவர்களிடத்தில் சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகச் சிறப்பான ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். நாங்கள் அமீராக இருப்போம். நீங்கள் அமைச்சர்களாக இருப்பீர்கள். ஏனென்றால் குறைஷியர்கள் வம்சத்தின் அடிப்படையில் அனைத்து அரபிகளை விடவும் மேலானவர்கள். பாரம்பரியத்தின் அடிப்படையில் அவர்கள் பழங்காலத்து அரபிகள் ஆவார்கள். ஆகவே உமர் அல்லது அபூ உபைதாவிடம் பைஅத் செய்யுங்கள் என்று அச்சொற்பொழிவில் கூறினார்கள்.

இதைக்கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவ்வாறன்று! நாங்களோ உங்களிடம் பைஅத் செய்வோம் என்றார்கள். அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம். ஏனென்றால், நீங்கள் எங்களுடைய தலைவரும் எங்களில் சிறந்தவரும் ஆவீர்கள். மேலும், எங்கள் அனைவரையும் விட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு அதிக விருப்பத்திற்குரியவராவீர்கள் என்று கூறியவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய கையை பிடித்து பைஅத் செய்தார்கள்.

முர்தத் ஆனவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் தலை தூக்கியபோது, ஆரம்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் போரை எதிர்த்து வந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய தீர்ப்புக்கு முன்னால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தலைகுனிந்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: போருக்காக அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய உள்ளத்தை திறந்து போது, இதுவே உண்மையாகும் என்று நான் புரிந்து கொண்டேன்.

யமாமா போரில் திருக்குர்ஆனை மனனம் செய்த எழுபது பேர் ஷஹீதான போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்தான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடத்தில் சென்று திருக்குர்ஆனை ஓரிடத்தில் ஒன்று திரட்டும்படி ஆலோசனை வழங்கினார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், இந்த குறிப்பு தொடரும். இன்ஷா அல்லாஹ்! இனிவரும் காலத்திலும் எடுத்துரைக்கப்படும் என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**